ஆரம்பநிலை - மத்தியதரநிலை I ஏற்றம் பெறல்

சுவிசில் பாடசாலைக்குச் செல்லும் கடமை 11 வருடங்களாகும். கட்டாய பாடசாலை ஆரம்பதரம் (2 வருட பாலர்பாடசாலை/அடிப்படை- அல்லது நுழைவுத்தரம் உட்பட) மற்றும் மத்தியதரநிலை I என்ற கட்டமைப்பைக் கொண்டுள்ளது.
ஆரம்பநிலையிலிருந்து மத்தியதரநிலை I க்கு ஏற்றம் பெற்றுச் செல்லும் முறை குறித்து அநேக பாடசாலைகளில் ஆரம்பப் பாடசாலையின் இறுதி வகுப்பில் ஆசிரியர்கள் அல்லது திணைக்களங்கள் பெற்றோருக்கு அறியத்தருவார்கள்.

திறமையைக் கொண்டிருத்தல்

ஆரம்பநிலையிலிருந்து மத்தியதரநிலை I க்கு ஏற்றம் பெற்றுச் செல்லும்போது வித்தியாசமான தரங்களுக்குப் பிரித்துவிடுவது, பிள்ளை கொண்டிருக்கும் பாடசாலைத் திறமைகளிலேயே தங்கியிருக்கும். சுவிசில் டொச்மொழி பேசும் பகுதியில் நீண்டகால கிம்நாசியம் என அழைக்கப்படும் ஒருமுறை உள்ளது, இதை ஆரம்பப்பாடசாலையின் பின்னர் உடனடியாகவே ஆரம்பிக்கலாம்.

உதவிகள்

உங்கள் பிள்ளையின் வகுப்பு ஆசிரியரே நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முதல் நபர் என்பதுடன் நகருக்குள்ளே மேலதிகமாக உள்ள உதவி வசதிகள் குறித்து அவர் அறியத்தருவார்.

உங்கள் கலாச்சார வட்டத்தில் உள்ள ஒரு அமைப்பும் உதவிசெய்யலாம்.

© 2024 SDBB | CSFO – 1 – Tamilisch, tamoul, tamil